<u>சுருக்கம்</u>

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோரின் கோரிக்கைகள் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந4)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 114** **நாள்: 22.08.2008**

**திருவள்ளுவர் ஆண்டு 2039**
**ஆவணி திங்கள் 6–ம் நாள்**

**படிக்க:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ஊனமுற்றோருக்கான புதிய சலுகைகள் பற்றிய 19.08.2008 நாளிட்ட செய்தி வெளியீடு.

---

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 19.08.2008 அன்று சந்தித்து, தங்களது கோரிக்கைகளை அளித்தார்கள். அப்போது ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் வெளியிடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்பொழுது ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் மூன்றாண்டு திட்டமாக அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அரசு ஆணையிடுகிறது. மேற்படி தொழிற்பயிற்சி நிலையம் மாவட்டந்தோறும் அமைக்க முன்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை தேர்வு

செய்து அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைக்க திட்டம் மற்றும் மதிப்பீட்டுடன் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. இவ்வாணை நிதித் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா. எண். 2684/FS/P/08 நாள் 22.08.2008

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை 6.
மாநிலக் கணக்காயர், சென்னை 9/18/35
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 35
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் (ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மூலமாக)
**<u>நகல்</u>**
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
நிதி (சந) துறை, சென்னை 9/நிதி (வழியாக) துறை, சென்னை 9
சமூக நலத் (சந2) துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்